**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.80/2022** **நாள். 29.07.2026**

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 29–ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 சீனிவாசன் த/பெ.ராசையன் (எ) மருதகண்டர்**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வா.சா.ஆ–9 ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு சொத்தின் வில்லங்கம் வாங்கி பார்த்தேன். மேற்படி வில்லங்கத்தில் தான செட்டில்மெண்ட் பத்திரம் ரத்தான விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி வில்லங்க சான்று நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். மேற்படி தான்செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் 2004ம் வருடம் ஏற்பட்டுள்ளது. மேற்படி தான்செட்டில்மெண்ட் ரத்து ஏற்பட்ட பின்பு நான் ஏற்படுத்தி கொடுத்தது தான் வா.சா.ஆ.9 ஆவணம் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்களான மின் கட்டண இரசீது, சொத்து வரி இரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்னர் ஏற்பட்டது என்றால் வா.சா.ஆ–10ல் உள்ள வீட்டு வரி இரசீதுகளில் ஒன்று இவ்வழக்கிற்கு முன்பும், ஒரு இரசீது இவ்வழக்கிற்கு பின்பும் ஏற்பட்டது ஆகும். வா.சா.ஆ–11 மின் கட்டண இரசீதுகள் இரண்டும் இவ்வழக்கிற்கு பின்னர் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3) மேற்படி வா.சா.ஆ–9, 10, 11 ஆவணங்கள் இவ்வழக்கிற்காக நான் உற்பத்தி செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.07.29 17:06:31 +0530

Sub Judge,
Paramathy